Registered as a Newspaper in Ceylon

சதம் 10

# ஈழநாடு


EELA NADU

போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி தபால் பெட்டி எண் 49

மலர் 7 யாழ்ப்பாணம் குரோதி மாசி 15 ஆம் நாள் ஷவ்வால் பிறை 23 (26-2-65) வெள்ளிக்கிழமை இதழ் 18

நீடித்த பாவனைக்கு

சொனென்ஷீன் சொனென்ஷீன்



பற்றறிகளையே உபயோகியுங்கள்

வடமாகாண ஏகவினியோகஸ்தர்கள்:-

துரை அன் கோ

23/3, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

# ஹிந்தி ஆட்சி மொழி; ஆங்கிலம் துணைமொழி

## நேருவின் உறுதி மொழிகள் சட்டமாக்கப்படும்

### பார்லிமெண்டில் சாஸ்திரி தகவல்

புதுடில்லி, பெப். 25

மொழிப் பிரச்னை குறித்து ராஜ்ய முதன் மந்திரிகள் செய்துகொண்ட முடிவுகளை இந்திய பார்லிமெண்டில் இன்று பிரதமர் சாஸ்திரி வெளியிட்டு பேசுகையில்; "இந்திய யூனியனின் ஆட்சிமொழி ஹிந்தி, துணை மொழி ஆங்கிலம்" என்ற அடிப்படைத் தீர்மானங்களில் மாறுதல்கள் எதுவும் செய்யப்படமாட்டாது என்று கூறினர். முதன் மந்திரிகளின் முடிவுகள் பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்பட்டு பார்லிமெண்டின் அங்கீகாரத்துடன் உத்தியோக மொழிச் சட்டத்தைத் திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

முதன் மந்திரிகளின் முடிவுகளை பிரதமர் வெளியிட்ட பின்னர் பார்லிமெண்டில் அங்கத்தவர்கள் பலவித கருத்துக்களைத் தெரிவித்தனர். "ஆங்கிலத்தையும் ஆட்சி மொழியாக்க சட்டம் திருத்தப்படவேண்டும்" என்று ஒரு சிலரும்; "ஆங்கிலம் உத்தியோக மொழியாக்கப்பட்டால் பிராந்திய மொழிகள் வளர்ச்சி அடையாது" என்று வேறு சிலரும் அபிப்பிராயம் தெரிவித்தனர். ஆங்கிலம், ஹிந்தி ஆட்சிமொழியாவதைப் பொதுவாக பலரு ஆதரித்து பேசியதுடன் மற்றைய பிராந்திய மொழிகளின் வளர்ச்சிக்கு ஆவன செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டனர்.

மொழிப் பிரச்னை குறித்து ராஜ்ய முதன் மந்திரிகள் செய்துகொண்ட முடிவுகளை இந்தியப் பிரதமர் திரு. லால் பகதூர் சாஸ்திரி இன்று பார்லிமெண்டின் இரு சபைகளிலும் வெளியிட்டார். மொழிப்பிரச்னை சம்பந்தமாக முதன்மந்திரிகள் தெரிவித்த யோசனைகள் யாவும் பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்படுமென்பது என்றும் இறுதித் தீர்மானத்தை பார்லிமெண்டு நிறைவேற்றியபின்னரே ஆட்சி மொழிச்சட்டம் திருத்தம்செய்யப்படும் என்றும் பிரதமர் சாஸ்திரி தெரிவித்தார்.

(6-ம் பக்கம் பார்க்க)

சுழிபுரம்

## மீனவரை கள்ளத்தோணி எனக் கைது செய்தனர்

### ராணுவத்தினர் பற்றி புகார்

சுழிபுரம், வியாழன்

திருவடிநிலையில் முகாமிட்டு இருக்கும் இராணுவத்தினர் அப் பகுதியில் மீன் பிடிக்கச் செல்லும் அப்பாவி மீனவர்களை துன்புறுத்தும் செயல் மாதாமாதம் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. பலவகையான முறைப்பாடுகள் செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் அடிக்கடி நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்தும்கூட, இராணுவத்தினரின் இவ்வித செயல் குறைந்ததாக தெரியவில்லை. நேற்று முன் தினம் கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற கிருஷ்ணர் சுப்பையா என்ற தொழிலாளியை கள்ளத் தோணியெனக் கைது செய்து துன்புறுத்தினர். கைது செய்யப்பட்டவரின் கூப்பனையும் பிறப்புப் பத்திரத்தையும் கொண்டு வரும்படி கேட்டனராம் மீன் பிடிப்பதற்கு பயன் படுத்தப்படும் வள்ளம், மட்டுமரம் போன்றவற்றை கடலில் அமிழ்த்துவிட்டும் சேதம் செய்துள்ளனர். இச்செயல் எல்லாவற்றையும் பெருக்கமாட்டாத மீனவர்கள், இப்பகுதி கிராமசேவையாளர், சாரியாதிகாரி, பொலிசார் ஆகியோருக்கு முறைப்பாடு செய்துள்ளனர். முன்னாள் வடமேற்கு கோட்டை பாராளுமன்ற உறுப்பினர் திரு அ. அமிர்தலிங்கம் தலைமையில் ஒரு தோண்டியினர் அரசாங்க அதிபரிடம் முறைப்பாடு செய்துள்ளனர். அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுப்பதாக அறிவித்துள்ளார்.

பம்பலப்பிட்டி, வியாழன்

கம்பகா மகாவித்தியாலயத்தில் பயின்று வந்த லக்ஷ்மன் ஜெயசேகரா என்ற 12 வயதுச் சிறுவன் அஸ்கிரியாவிலுள்ள அத்தனகலு ஓயா ஆற்றில் தமது நண்பர்களுடன் நீச்சல் பயிற்சி பெற்றுக்கொண்டிருக்கையில் நீரில் மூழ்கி மாண்டார்.

## யாழ்ப்பாணத்துக்கு மேலும் 5 இரட்டைத்தட்டு பஸ்கள்

### அடுத்த வாரம் வந்து சேரும்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். மாவட்ட பஸ் சேவையை மேலும் சீராக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதென போக்குவரத்து அமைச்சர் திரு. அனில் முனசிங்கா முடிவுசெய்துள்ளார். மேலும் ஐந்து இரட்டைத்தட்டுப் பஸ்களை அடுத்த வாரம் யாழ்ப்பாணத்திற்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாக அவர் தெரிவித்துள்ளார்.

மந்திரி அனில் முனசிங்கா நேற்றுப் பகல் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் யாழ்ப்பாணப் பிரதேசக் காரியாலயத்திற்கு விஜயம் செய்தார். திரு. அனில் முனசிங்கா போக்குவரத்து அமைச்சரான பின் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு 11 டபிள் டெக்கர்களும், 8 ஸ்ரீ பஸ்களும அனுப்பிவைக்கப்பட்டன.

6 மாத காலத்திற்குள் யாழ்ப்பாண பஸ் சேவை இலங்கையில் முதல் தரமானதாக்கப்படும் எனவும் திரு. முனசிங்கா கூறினார். தொழிலாளரின் ஒற்றுமைக்

(6-ம் பக்கம் பார்க்க)

கோண்டாவில்

## சிசுக் கொலை வழக்கு: விசாரணை இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், வெள்ளி

கோண்டாவில் சிசுக்கொலை வழக்கு வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் பி ஸ்ரீஸ்கந்தராசா முன்னிலையில் நேற்றுக் காலை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் 1964-ம் ஆண்டு ஜனவரி 22-ல் கோண்டாவிலைச் சேர்ந்த கதிரன் செல்லன் என்பவர் தனது மகள் சரஸ்வதிக்குப்பிறந்த நாமமிடப்படாத குழந்தையைக் கொலை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

எதிரி சார்பில் வழக்கறிஞர் திரு. எஸ். நாகராசா ஆஜரானர். எதிரிக்காக அரசாங்கத்தால் திரு. த. யோகநாதன் நியமிக்கப்பட்டார். விசாரணை இன்று காலை 10 மணிக்கு ஆரம்பமாகும்.

## நெருக்கடியை ஏற்படுத்தாதீர்கள்

### மொழிப் பிரச்னை குறித்து இந்தியப் பிரதமர் கோரிக்கை

புதுடில்லி, பெப் 25

மொழிப் பிரச்னை குறித்து அரசாங்கத்துக்கு நெருக்கடிகளை ஏற்படுத்தும் எந்தவித முயற்சியிலும் யாரும் ஈடுபட வேண்டாமென்று சகல இன மக்களுக்கும் இந்தியப் பிரதமர் சாஸ்திரி உருக்கமான வேண்டுகோளை விடுத்துள்ளார்.

இந்தியாவை நோக்கி வெளிநாட்டு அபாயங்கள் தொடர்ந்திருந்துவருகிறதெனவும் நாட்டு மக்கள் அனைவரும் ஒருமையுடன், கருத்து வேறுபாடின்றி அரசாங்கத்துக்கு ஆதரவளிக்கவேண்டுமென்றும் பிரதமர் சாஸ்திரி கேட்டுக்கொண்டார்.

பார்லிமெண்டில், அங்கத்தவர்கள் கேட்ட கேள்விகளுக்கு பிரதமர் பதிலளிக்கையில்; முதன் மந்திரிகளின் முடிவுகளைத் தொடர்ந்து பார்லிமெண்ட் மேற்கொள்ளும் தீர்மானத்தின் பின்னர், மத்திய

(6-ம் பக்கம் பார்க்க)

## ஆட்சி மொழியை திருத்த வேண்டாம்

### 100 காங்கிரஸ் எம். பி.க்கள் மகஜர்

புதுடில்லி, பெப். 25

இன்று மாலை சுமார் நூறு காங்கிரஸ் எம். பி. க்கள் பிரதமர் சாஸ்திரியைச் சந்தித்து மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்தனர்.

உத்தியோக மொழிச் சட்டத்தை திருத்தவேண்டாம் என்று அவர்கள் அம் மகஜரில் கோரியுள்ளனர். உத்தியோக மொழிச்சட்டம் திருத்தப்பட்டால் ஹிந்திக்கு விளைவுகள் ஏற்படும் என்றும் மொழிச் சட்டத்தை திருத்தக்கூடிய நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளவேண்டாமென்றும் அவர்கள் கேட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

சுறுசுறுப்பாயிரு; ஆனால் படபடப்பாயிராதே. பொறுமையாயிரு; ஆனால் சோம்பேறியாயிராதே. சிக்கனமாயிரு; ஆனால் கருமியாயிராதே. வீரனாயிரு. ஆனால் போக்கிரியாயிராதே. இல்லறத்தை நடத்து; ஆனால் காமவெறியனாயிராதே. பற்றற்றிரு; ஆனால் காட்டுக்குப்போய் விடாதே. நல்லோரை நாடு; ஆனால் அல்லோரை வெறுக்காதே.

—ஞானானந்தகிரி சுவாமிகள்.

ஈழநாடு
EELA NADU

EELA NADU National Tamil Daily. Post Box: 49, Jaffna. Telegrams: 'EELA NADU' Jaffna Phone: 389.

யாழ்ப்பாணக் குரோதி ஆண்டு மாசி ௴ 15 உ (26-2-65)

## நல்ல செய்தி

புதுடில்லியிலிருந்து நல்ல செய்தி கிடைத்துள்ளது. இந்தியையும் ஆங்கிலத்தையும் இந்தியாவின் ஆட்சிமொழிகளாகச் செய்ய வேண்டுமென்று ராஜ்ய முதல் மந்திரிகள் மகாநாடு ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது. இம்மகாநாடு வெற்றிகரமாகவும் பயனுள்ளதாகவும் முடிவடைந்துள்ளதாகவும், ராஜ்ய முதல் மந்திரிகள் திருப்தியுடனும் மகிழ்ச்சியுடனும் திரும்பியுள்ளதாயும், இம்மகாநாடு மொழி விஷயமாகச் செய்துள்ள பல முக்கிய முடிவுகளைப் பார்லிமெண்டில் சமர்ப்பிப்பதாயும் பிரதமர் சாஸ்திரி தெரிவித்துள்ளார். இதைத் தழுவி, ஆட்சி மொழிச் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று மத்திய ராஜ்ய அரசாங்கங்களுக்கு காங்கிரஸ் காரியக்கமிட்டியும் கோரிக்கை செய்துள்ளது.

மிகச் சிக்கலானதும் முக்கியமானதுமான இவ் விஷயத்தில் இரண்டே நாட்களுக்குள் ஏகமனதான நல்ல முடிவுகளைச் செய்ய முடிந்தது பாராட்டப்படத்தக்கதாகும். இந்தியத் தலைவர்களின் தீர்க்கதரிசனத்துக்கும், விரிந்த மனப்பான்மைக்கும் இது கல்லதோர் அத்தாட்சி. இந்த முடிவுகளுக்கு இணங்க கூடிய சீக்கிரத்தில் அங்கு ஆட்சி மொழிச் சட்டம் திருத்தப்படுமென்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

சென்ற ஜனவரி மாதம் 26 ம் திகதிதான் இந்தி ஆட்சி மொழியாக அறிவிக்கப்பட்டது. இன்னும் ஒரு மாதம் கூட ஆகவில்லை. அதற்குள்ளாக அந்தச் சட்டத்தைத் திருத்தி, ஆங்கிலத்தையும் ஆட்சி மொழியாக நீடிக்க வேண்டுமென்று தீர்மானித்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். சென்னை முதலிய இந்தி பேசாத ராஜ்யங்களிலுள்ள பொது மக்களின் கருத்தை மதித்தே இந்த முக்கிய மாற்றத்தை இவ்வளவு சீக்கரத்தில் செய்துள்ளனர். அப்பகுதிகளில் விரும்பத்தகாத பலாத்காரச் செயல்களும், உயிர், பொருட்சேதங்களும் ஏற்பட்டனதான். அவை பெரிதும் வருந்தத்தக்கதே. அங்கு பொதுமக்களின் உணர்ச்சியை முன்கூட்டியே அறிந்து அதற்குத்தக்க முறையில் மொழிச் சட்டத்தை அமுல் செய்திருப்பின், இந்தச் சேதங்கள் ஏற்படாமல் தடுத்திருக்கலாம்.

இது எப்படியாயினும்,வீண் பிடிவாதம் காட்டாமல் மொழி விஷயத்தில் இப்போதாவது எல்லா ராஜ்யங்களும் காங்கிரஸ் காரியக் கமிட்டியும் இந்தி பேசாத மக்களின் கருத்துக்கு மதிப்பளித்து, பழைய ஏற்பாட்டை மாற்ற முன்வந்துள்ளது பெரிய காரியம். டில்லி முதலிய இடங்களிலே சிலமொழிவெறியர்கள் இதைத் தீவிரமாக எதிர்க்கலாம், ஏற்கெனவே அங்கு ஆங்கில எழுத்துக்களை அழிக்கும் தார்ப்பூச்சு இயக்கம் ஆரம்பித்துள்ளதாக செய்தி கிடைத்தது. அவ்வித வெறிச்செயல்களுக்குச் சற்றும் இடம்கொடாமல், அரசாங்கமும், காங்கிரஸ் ஸ்தாபனமும் கண்டிப்பான மனப்பான்மை காட்டினால் அது தானே அடங்கிவிடும்.

அண்டை நாடான இந்தியாவின் இந்த அனுபவமும் முன்மாதிரியும் இலங்கையிலுள்ள நமக்கும் ஆட்சிமொழிப் பிரச்னையைச்சுமுகமாகத்தீர்க்க உதவவேண்டும். இந்தியாவில் இந்தி மட்டும் ஆட்சிமொழியாக்கப்பட்டதை மாற்றி ஆங்கிலமும் ஆட்சிமொழியாக்கப்படுகின்றது. பாகிஸ்தானிலும் இது பற்றி பலத்த கிளர்ச்சி நடந்து, உருதுவுடன், வங்காளியும் ஆட்சிமொழிகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், ஆங்கிலமும் நீடித்துவருகின்றது. இலங்கையிலே தேசிய உணர்ச்சி வேகத்தில் தனிச் சிங்களச்சட்டம் பலத்த எதிர்ப்பிடையே நிறைவேற்றப்பட்டது முதல் நாட்டில் ஒற்றுமையும் அமைதியும் குலைந்தன. இந்தும் மொழிச்சட்டம் தக்கபடி திருத்தப்படாதவரை நாடு முன்னேற முடியாது. இந்தியாவும் பாகிஸ்தானும் காட்டியுள்ள மேலான வழியும் அவற்றின் அனுபவங்களும் இலங்கைக்கும் நல்லபாடமாக இருந்து, இங்கு இதே மொழிப் பிரச்னையைத் தீர்க்க உதவ வேண்டும். அவ்வித அரசியல் ஞானமும் துணிச்சலும் இனி புதிய பார்லிமெண்ட் மெம்பர்களுக்கு இருக்குமென்றே நம்புவோம்.

# திருக்கேதீச்சரத்தில் மஹாசிவராத்திரி

— ஆ. கந்தையா எம். ஏ. —

தொண்டர் நான் தொழக் குதிசெய் அருள் செய் கேதீச்சரத்தில் இவ்வாண்டு 1-3-65 திங்கட்கிழமை மஹா சிவராத்திரி வழமைபோல் விமரிசையாக நடைபெறத் திருவருள் கூட்டியுள்ளது. சிவராத்திரி தினத்தன்று கௌரி சமேத கேதீச்சர நாதருக்கு விசேட பூசை அபிஷேகங்கள் நான்கு சாமத்திலும் வழமை போல் நடைபெறும்.

### இரவு நிகழ்ச்சிகள்

ஆலயத்தில் அன்று இரவு முழுவதும் சைவப்பிரசங்கம், கதாகாலக்ஷேபம், சங்கீதக் கச்சேரி, தோத்திர பாராயணம், கூட்டுப்பிரார்த்தனை, புராணபடலம் என்பன நடைபெறும். இவ்வாண்டு சிவராத்திரி நிகழ்ச்சிகள், கைதடி திரு. கே. பழனிமலை குழுவினர் மேளக்கச்சேரியுடன் ஆரம்பமாகும். திருமதி சரஸ்வதி பாக்கியராஜாவின் சங்கீதக் கச்சேரி நிகழ்ச்சியில் முக்கிய இடம் பெறுகிறது. செல்விகள் ஞானசிவசுப்பிரமணியம் அருந்ததி சிவசுப்பிரமணியம் ஆகியோர் இன்னிசை விருந்தளிப்பர். திரு. த. மாணிக்கவாசகர் தோத்திரப் பாடல்களும் திரு. எஸ். எம். ராஜாராமின் கூட்டுப் பிரார்த்தனையும் இடம் பெறுகின்றன. உயர் திரு கணபதி குழுவினர்களது கூட்டுப் பிரார்த்தனையும் நிகழ்ச்சி நிரலில் இடம் பெறுகிறது.

முத்தமிழ் மணி வி எஸ் எஸ. மணிஐயர் கதாப்பிரசங்கம் செய்து மகிழ்விக்க முன்வந்துள்ளார், செல்வி யோகா சிவசுப்பிரமணியம், திருமதி ஜெயம் கந்தையா ஆகியவர்களின் இரு வீணை நிகழ்ச்சியும் இடம் பெறுகின்றது. திருக்கேதீச்சர குருகுல மாணவர்கள் வேதம் ஓதுபவர்கள் திரு. எஸ. இராமசுவாமி ஐயரின் புல்லாங்குழல் கச்சேரியும் இடம் பெறுகின்றது திருமதி நதுலேஸ்வரனும் கைதடி குருடர் செவிடர் பாடசாலை மாணவர்களும் பக்திப் பாடல்கள் பாடுவர்,

### வானொலி அஞ்சல்

திருக்கேதீச்சரத்தில் நிகழவிருக்கும் சிவராத்திரி நிகழ்ச்சிகளை இலங்கை வானொலி பகுதியார் அஞ்சல் செய்ய முன்வந்துள்ளனர், 1-3-65 இரவு 9-30 மணி தொடக்கம் காலை 6-45 மணிவரை வானொலி அஞ்சல் நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது. சிவன் இரவைத் திருக்கேதீச்சரத்தில் கழிக்க முடியாத அடியார்கள் இல்லங்களில் இருந்தபடியே சிவராத்திரி நிகழ்ச்சிகளை வானொலியில் கேட்டு மகிழ வாய்ப்புண்டு.

### தீர்த்தக் காவடி

நானூறு ஆண்டுகளாக மறைந்திருந்த மகாலிங்கப் பெருமானுக்கு மஹாசிவராத்திரி தினத்தில் இரவு சாமங்கள் ஒவ்வொன்றிற்கும் 108 தொண்டர்கள் பாலாவியில் தீர்த்தக் காவடியெடுத்து வந்து முறைப்படி தாமே அபிஷேகம் செய்ய ஏற்பாடுகள் செய்யப் பெற்றுள்ளன. கொழும்பு இந்து வாலிப சங்கத்தாரின இரண்டாம் சாம பூசையும், தீர்த்தக்காவடியும் வழமைபோல் நடைபெறவிருக்கின்றன,

### போக்குவரத்து

மஹா சிவராத்திரிக்குத் திருக்கேதீச்சரம் செல்ல விரும்பும் அடியார்களுக்கு போக்குவரத்து வசதி ஒன்றை ஒழுங்கு செய்யக் கொழும்பு இந்து வாலிப சங்கத்தார் முன் வந்துள்ளனர், இந்த யாத்திரைக் கூட்டத்திற் சேரும் அடியார்கள் 27-2-65 சனிக்கிழமை இரவு 8-35 மணிக்கு கோட்டை புகையிரத நிலையத்திலிருந்து புறப்படுவர். பின்னர் சிவராத்திரியைத் திருக்கேதீச்சரத்தில் கழித்தபின் 2-3-65 செவ்வாய்க்கிழமை இரவு 8 மணிக்கு மன்னாரிலிருந்து கொழும்புக்கு புறப்படுவர்.

இவ்வாண்டு திருக்கேதீச்சரம் செல்லும் அடியார்கள் திருக்கேதீச்சரப் புகையிரத நிலையத்தில் இறங்க வேண்டும். அங்கிருந்து கோயிலுக்குச் செல்வதற்குப் பல வண்டி ஒழுங்குகளைத் திருக்கேதீச்சரம் திருப்பணிச்சபையார் செய்துள்ளனர்.

திருக்கேதீச்சரம் வரும் அடியார்களுக்குச் சிவராத்திரி தினத்தன்று திருப்பணிச் சபையாராலும் தீர்த்த தினத்தன்று பாலாவி பஜனசேவா சங்கத்தாராலும் அன்னதானம் வழங்கப்பெறும். 1-3-65-ல் விரும்பும் அடியார்களுக்குச் சிவதீக்ஷை பெறுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

ஆசிரியருக்குக் கடிதம்

## பிரசவவிடுதியும் வைத்தியமும்

உருத்திரபுரம் பிரசவவிடுதியும் உதவி வைத்தியசாலையும் பல வருடங்களுக்கு முன்னர் இங்கு கட்டப்பட்டு, வாரம் இருமுறை கிளிநொச்சி வைத்திய அதிகாரி வந்து நோயாளருக்கு இயன்றவரை சேவை புரிந்து வருகிறார். பிரசவ விடுதிக்கென ஒரு மருத்துவ மாதும் நியமிக்கப்பட்டிருக்கிறார். இருந்தும் 500க்கு அதிகமான குடும்பங்கள் வாழ்ந்து வருவதினால் நிரந்தரமாக ஒரு உபவைத்தியரையாவது நியமித்துத் தருமாறும், தேவையான மருந்துகளைத் தந்துதவுமாறும் அரசாங்க மேலதிகாரிகளுக்கு அறிவித்த போதிலும் இதுவரை எமது வேண்டுகோள் கணிக்கப்படவில்லை.

இந்த இரு விஷயங்களையும் மேலதிகாரிகள் கவனித்து ஆவன வேண்டிய நடவடிக்கைகளை விரைவில் எடுத்து எமது பகுதி மக்களின் குறைகளை நிவர்த்தி செய்வார்கள் என எதிர்பார்க்கிறோம்.

ம. சூ. தம்பிநாயகம்,
காரியதரிசி.
உருத்திரபுரம் மேற்கு.
கி. மு. சங்கம்,

## கிராமசபையின் தீர்மானம்

துனுக்காய், வியாழன்

மல்லாவிச் சந்தியில் ஒரு பொதுக்கிணறும், யாத்திரிகர்கள் தங்கும் மடமும் அமைப்பது என்னும் தீர்மானம் துனுக்காய் [illegible] கூட்டத்தில் ஏகமனதாய் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது,

## ஒற்றையாட்சியே சிறந்தது

யாழ்ப்பாணம், வெள்ளி

"தமிழ்பேசும் மக்கள் சமஷ்டி ஆட்சியினால் நன்மைபெற முடியாது. தமிழர்கள் ஒற்றை ஆட்சியில் தான் சுபிட்சமாகவும் சுய மரியாதையுடனும் வாழமுடியும்" என்று தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு ஜி. ஜி பொன்னம்பலம் நாச்சிமார் கோவிலடியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார்.

நல்லூர்த் தொகுதியில் தமிழ்க் காங்கிரஸ் அபேட்சகராகப் போட்டியிடும் திரு. சி. அருளம்பலத்தை ஆதரித்து நாச்சிமார் கோவில் சந்தை மைதானத்தில் திரு. டி. எஸ். துரைராஜா தலைமையில் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் மற்றும் பலரும் பேசினர்.

## தபால் அதிகாரிகள் கூட்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி

இலங்கை தமிழ் பேசும் உப-தபால் அதிகாரிகள் தொழிற் சங்கத்தின் கூட்டமொன்று வருகிற ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடை பெறவிருக்கின்றது. இக் கூட்டத்தில் தபால் அதிபர் திரு. ஏ. எல். பெரேரா கலந்துகொள்வார்.

(5-ம் கலத் தொடர்ச்சி)

ஒருவர் மூக்குக் கண்ணாடி, துவரெலியாவில் ஒருவர் கைப்பிடியுள்ள மணி, பொத்துவிலில் ஒருவர் வானொலிப் பெட்டி. எல்லாமே பயனுள்ளவைதான். ஆனால் வாக்காளர் தீர்ப்பு எப்படியோ!

—வழிப்போக்கன்

## நாட்டிலும் நகரிலும்

இலங்கை சுதந்திர நாடாவதற்கு முன்பு நடைபெற்ற அரசாங்க சபைத் தேர்தல்களில் அபேட்சகர்களுக்கு தேர்தல் சின்னங்கள் அளிக்கப்படவில்லை, அப்பொழுது அரசியல் கட்சிமுறை ஏற்படவில்லை. எல்லோருமே சுயேச்சை அபேட்சகர்கள். அவர்களுக்கு பச்சை, மஞ்சள், நீலம் என்று வெவ்வேறு நிறங்கள் அளிக்கப்பட்டன. ஆதரவாளர்கள் 'போடு போடு பச்சைப் பெட்டி; போடு போடு நீலப் பெட்டி' என்று பிரசாரம் செய்வார்கள், வாக்காளர் தமது வாக்குச் சீட்டில் புள்ளடிபோன்ற குறியிடுகள் போடத்தேவையில்லை. சீட்டுப் பெட்டிகள் வெவ்வேறு வர்ணங்களில் இருக்கும் தாம் விரும்பிய அபேட்சகரின் நிறமுள்ள பெட்டிக்குள் சீட்டைப் போட்டுவிட்டுத் திரும்புவார்,

இந்த முறையில் ஒரு குறைபாடு இருந்தது, பலருக்கு, அநேகமாக வயது போனவர்களுக்கு, நீலத்துக்கும் பச்சைக்கும், மஞ்சளுக்கும் சிவப்புக்கும் வித்தியாசம் தெரியமாட்டாது. வேறு சிலருக்கு நிறக்குருடு இருந்தது. நீலத்தைப் பச்சை என்று சாதிப்பார்கள்.

சின்னங்கள் ஏற்பட்டபின்பு இந்த மயக்கம் ஒரு வகையில் மறைந்துவிட்டது. வரப்போகும் தேர்தலில் எத்தனை சின்னங்கள் இருக்கின்றன என்று கவனித்தீர்களா? இருபத்தைந்துக்கு மேற்பட்ட சின்னங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அங்கீகரிக்கப்பட்ட பதினொரு அரசியல் கட்சிகளில் பிரதானமான ஏழெட்டு கட்சிகளின் சின்னங்கள் அநேகமாக எல்லோருக்கும் தெரிந்தவை. யூ என் பி. யின் யானை, சுதந்திரக் கட்சியின் கரம், சமசமாஜிகளின் திறவுகோல், தமிழரசின் வீடு, காங்கிரசின் சைக்கிள். இச்சின்னங்கள் பலருக்குப் பரிச்சயமானவை.

கோளூர முதயான்ஸலாகே பொடியப்புஹாமி ராஜரத்தின் ஜாதிக விமுக்தி பெரமுனை கட்சியின் சின்னம் என்ன தெரியுமா? ஆகாய விமானம். பொதுவாக கட்சித் தலைவர்கள் சின்னங்களைத் தெரிவுசெய்யும் போது ஒரு குறிப்பிட்ட அர்த்தத்துடன் தான் தெரிவுசெய்வார்கள். வலிமைக்கும் உறுதிக்கும் யானை சின்னமாக விளங்குகிறதென்று யூ. என். பி. சொல்லும்; கரம் எல்லோருக்கும் அபயம் அளிக்குமென்று சிறிமா கட்சி கூறும்; ராமராஜ்யத்துக்கு திறவுகோல் எங்களிடமிருக்கிறதென்று எல். எஸ். எஸ். பி. புகலும் இப்படியே ஒவ்வொரு கட்சியும். ராஜரத்தினாவின் ஆகாய விமானம் இலங்கையிலுள்ள இந்தியர் எல்லோரையும் விமானத்தில் கொண்டுபோய் இந்தியா சேர்ப்போம் என்று கூறுகிறதோ!

சுயேச்சை அபேட்சகர்கள் பொறுக்கி எடுத்த சின்னங்களில் சில மிகவும் விசித்திரமானவை, பூ, பஸ், சேவல், ஏணி, கப்பல், குருவி, கண், மணிக்கூடு எல்லாம் காணப்படுகின்றன, ஆனால் இவர்களில் பூவுக்குப் பூ தாவும் வண்ணாத்திப் பூச்சியை எடுத்தவர்கள் தான் மிக மிகப் பொருத்தமான தெரிவு செய்திருக்கிறார்கள்!

145 தேர்தல் பிரிவுகளில் போட்டியிடும் 493 அபேட்சகர்களில் (இரண்டொருவர் இப்பொழுது வாபஸ் பெற்று விட்டார்கள்) ஆக நாலே நாலு பேர் மட்டும், சின்னங்களைப் பொறுத்த வரையில், தனிக் காட்டு ராஜாவாக நிற்கிறார்கள். இவர்கள் பொறுக்கிய சின்னங்களை இலங்கையில் வேறெவருமே பொறுக்கவில்லை கெக்கிராவையில் ஒருவர் தேநீர் கோப்பை, மன்னாரில்

(4-ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரிய ஜெட் விமானங்களுடன் அமெரிக்கத் தாக்குதல்

## வியட்னுமியர் மீது யு. எஸ். விமானிகள் நடவடிக்கை

### யுதாண்ட் கவலை

சைக்கோன், பெப். 25

அமெரிக்க விமானிகளால் செலுத்தப்படும் பெரிய ஜெட்வெடிகுண்டு விமானங்கள் முதல்டதவையாக நேற்று வட வியட்னுமியருக்கு எதிராக உபயோகிக்கப்பட்டது. இதுவரை காலமும் சிறிய ஜெட் விமானங்களும், ஹெலிகோப்டர்களும் மட்டுமே சண்டையில் ஈடுபடுத்தப் பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நடவடிக்கை அமெரிக்காவின் கொள்கைக்கு உட்பட்டதுதான் என வெள்ளை மாளிகை அறிக்கை ஒன்று கூறியது.

ஐ. நா. பொதுக் காரியதரிசி யுதாண்ட் விடுத்துள்ள ஒரு அறிக்கையில் வியட்னும் பிரச்னை பற்றி பிரதான வல்லரசுகளுடன் தாம் பேச்சு நடத்தியதாய்க் கூறியிருக்கிறார்.

தென்கிழக்காசியாவில் நெருக்கடியைத் தவிர்க்க புதிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்றும், அங்கு சண்டைநிறுத்தப்பட்டு அமெரிக்கத் துருப்புக்கள் வெளியேறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் யுதாண்ட் கூறினார்.

அமெரிக்கா பெரிய ஜெட் விமானங்களைக் கொண்டு தாக்குதலை அதிகப்படுத்தியிருப்பது பற்றி யுதாண்ட கவலை தெரிவித்தார்.

வியட்னும் நிலைமை பற்றி ஆராய சர்வதேச மகாநாடு ஒன்றைக் கூட்டுவதில் பிரான்சும், ரஷ்யாவும் ஒத்துழைக்கும் என அறிவிக்கப்பட்டது.

உல்பிரைட் விஜயம்

## ஐ. அ. குடியரசுக்கு சகல உதவியும் நிறுத்தம்

### மேற்கு ஜெர்மனி நடவடிக்கை

பொன், பெப். 25

கிழக்கு ஜெர்மன் அதிபர் உல்பிரைட் கெய்ரோவுக்கு விஜயம் செய்ததை அடுத்து ஐக்கிய அராபியக் குடியரசுக்கு தனது சகல உதவிகளையும் நிறுத்தப்போவதாய் மேற்கு ஜெர்மனி அறிவித்தது.

திரு. உல்பிரைட் நேற்று கெய்ரோ வந்துசேர்ந்தார். ஐக்கிய அராபியக் குடியரசில் ஒருவாரம் தங்கவிருக்கும் அவரை ஜனாதிபதி நாஸர் வரவேற்ருர்.

ஐக்கிய அராபியக் குடியரசுக ஒப்பந்தம் ஒன்றில் உல்பிரைட் கையெழுத்திடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்கு ஜர்மனி தனது பொருளாதார உதவியைநிறுத்தியது மட்டுமின்றி, கெய்ரோவுடனை ராஜீப உறவைப் பற்றியும் பரிசீலித்து வருவதாய் அறிவிக்கப்படுகிறது. மேற்கு ஜெர்மனியின் நடவடிக்கையை அமெரிக்கா ஆதரித்திருக்கிறது.

சாஸ்திரி–சிறிமா ஒப்பந்தம்

## தனி இடாப்பு பற்றி இருதரப்பிலும் கருத்து வேற்றுமை

கொழும்பு, வியாழன்

சிறிமா–சாஸ்திரி ஒப்பந்தத்தை அமுல் நடத்துவதென இலங்கை-இந்திய அதிகாரிகள் கூடி ஆலோசித்து வந்தபொழுதிலும், ஒப்பந்தத்தை சமூகமான முறையில் அமுல்செய்யக் கூடிய அதிகாரிகள் கமிட்டி ஒன்றை நியமிக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் தென்படவில்லை என அவற்றுடன் சம்பந்தப்பட்ட நெருங்கிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஒப்பந்தத்தின்பிரகாரம் இலங்கைப் பிரஜைகளாகப் பதிவு செய்யப்படவிருக்கும் இந்திய வம்சாவளியினருக்கு தனி இடாப்பு வைப்பதென்ற இலங்கை அதிகாரிகளின் கொள்கையே இதற்குக் காரணமாகும். தனி இடாப்பு தற்காலிகமாகவே வைக்கப்படும் என இலங்கை அதிகாரிகள் தெரிவித்துள்ள போதிலும் 'தற்காலிகமாக' வென்ருல எவ்வளவு காலம் என்பதைக் குறிப்பிட்டுக் கூற வேண்டும் என இந்திய அதிகாரிகள் கோரியுள்ளனர்.

ஆனல் அதுபற்றி இலங்கை அதிகாரிகள் விளக்கம் தெரிவித்ததாகத் தெரியவில்லை.

## ஹரிமன்

டெல்அவிவ், பெப் 25

ஜனதிபதி ஜோன்ஸனின் விசேஷ தூதர் திரு. அவரல் ஹரிமன் இஸ்ரேலுக்கு விஜயம்செய்திருக்கிருர். இஸ்ரேல்-அராபிய உறவுகள் பற்றி அவர் பேச்சுக்கள் நடத்துவார்.

## கோஸிஜினுக்கு பொன். அழைப்பு

பொன், பெப். 25

மேற்கு ஜெர்மனிக்கு விஜயம் செய்யுமாறு சோவியத் பிரமர் திரு. கோஸிஜின் அழைக்கப்பட்டிருக்கிருர். திரு. கோஸிஜின் இந்த அழைப்பை ஏற்றுக்கொண்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

தமிழ்நாடு

## முதன்மந்திரிக்கு மிரட்டல் கடிதங்கள்

புதுடில்லி, பெப். 25

தமிழ்நாட்டு முதன் மந்திரி திரு. பக்தவத்சலத்தின் தலைக்கு விலை வைக்கப் பட்டிருப்பதாக அச்சுறுத்தி அவருக்கு அனுமதேய கடிதங்கள் வந்ததாக லோகசபையில் காங்கிரஸ் அங்கத்தவர் திரு என. எம். ஆர். சுப்பராமன் கூறினர்.

முதன் மந்திரியும் ராஜ்ய பொலிஸ் மந்திரியும் துரோகிகள், என அக் கடிதங்கள் குறிப்பிட்டதாக சபையில் ராஷ்டிரபதி உரைமீது நடந்த விவாதத்தில் அவர் கூறினர்.

"எனக்கு அத்தகைய கடிதங்கள் வந்துள்ளன. என்னையும் துரோகி என அவை கூறுகின்றன. இக் கடிதங்களில் பிரதாபசிங் கெய்ரானுக்கு நேர்ந்த கதி சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது" என்று திரு. சுப்பராமன் தெரிவித்து இத்தகைய விஷயங்கள் நீடித்தால் ஜனநாயகம் எவ்வாறு செயல்பட முடியும் எனக் கேட்டார்.

## நாகர் பேச்சு ஒத்திவைப்பு

ஷில்லாங், பெப். 25

பகைநாகர்களுடன் நேற்று அமைதிப் பேச்சுகள் மீண்டும் ஆரம்பமாகின. 6 மணி நேரப் பேச்சுக்குப்பின் அடுத்த கூட்டம் வருகிற மாதம் வரை ஒத்திவைக்கப்பட்டது.

## நேரு பெயரில் ரஷ்ய ஹோட்டல்

புதுடில்லி, பெப், 25

திரு. நேரு உஸ்பெக்கிஸ்தானுக்கு விஜயம் செய்திருந்த போது அங்கு தங்கியிருந்த ஹோட்டலுக்கு அவரது பெயர் வைக்கப்பட்டிருப்பதாக இந்தியா வந்துள்ள சோவியத் தூதுகோஷ்டித் தலைவர் கூறினர்.

## ஜெனரல் கான்

சைகோன், பெப். 25

தமது அதிகாரங்களை ஒப்படைக்கும் பொருட்டுலை சகோதர் தளபதி ஜெனரல் கான் இன்று ... கூட்டத்திற்குச் செல்வதற்காக விமானத்தில் ஹாங்காங் புலப்பட்டார்.

## திபெத்தில் மத நசுக்கல்

ஹாங்காங், பெப், 25

திபெத்திலுள்ள பௌத்த மடங்களையும், பிக்குகளையும் குறைக்க சீன அரசாங்கம் திட்டமிட்டு வேலைசெய்து வருவதாய் அறிவிக்கப்படுகிறது. சீனர்கள் திபெத்தில் பிரவேசித்தபோது 28,000 பிக்குகள் இருந்ததாயும், இப்போது 300 வயோதிக பிக்குகள் மட்டுமே அங்கிருக்கிருர்கள் என்றும் அறிவிக்கப்பட்டது. 3 பௌத்த மடங்கள் மட்டும் தான் அங்கு இருக்கிறதாம், ரயில் பாதைகளை அமைக்க பிக்குகள் அனுப்பப்படுகிருர்களாம்.

## காஷ்மீர் முன்னுள் பிரதமர் மீது பகிரங்க விசாரணை

### கமிஷன் ஒருவர் முடிவு

ஜம்மு, பெப் 25

காஷ்மீர் முன்னுள் பிரதம மந்திரி பக்ஷிகுலாம் முகம்மது மீது கூற்ற பட்டுள்ள புகார்களை பற்றி ஒரு நபர்கமிஷன் தனது விசாரணையை ஆரம்பித்தது. நீதிபதி திரு என். ராஜகோபால ஐயங்காரிடம் இப்பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கமிஷனிடம் தாக்கல் செய்யப்பட்டுள்ள 38 குற்றச் சாட்டுகளை கமிஷன் அனுமதியுடன் முடிசூரிய வழக்கறிஞர் திரு. பி. எம். கபட்டா 8 தொகுதிகளாகப் பிரித்துள்ளார்.

விசாரணை பகிரங்கமாக நடக்குமென்றும் நீதிபதி அறிவித்தார். பொது மக்கள் அறியும் விதத்தில் குற்றச்சாட்டுகளை பிரசுரிக்குமாறு அவர் உத்தரவிட்டுள்ளார். நான்கு வாரங்களுக்குள் சாட்சியங்களைத் தெரிவிக்கும்படியும் அவர் தெரிவித்துள்ளார்.

தாஸகமிஷன், விவியன் போஸ கமிஷன் விசாரணையின் போது, சில குற்றச்சாட்டுகள் பகிரங்கமாக விசாரிக்கப்படவில்லை என்பதை எதிரிகள் தரப்பு வக்கீல் திரு. பி. ஸென் சுட்டிக் காட்டினுர். இக்குற்றச்சாட்டுகளில் விசாரணைக்கான ஆதாரம் இருக்கிறதா என்பது இனிமேல்தான் நிர்ணயிக்கப்படவேண்டும். குற்றச்சாட்டுகளில் ஏதேனும் ஆதாரம் இருந்தால் ரகசியவிசாரணை நடத்தவேண்டுமெனளுர்.

இது பூர்வாங்க விசாரணை கட்டமாதலால் பகிரங்கமாக நடத்தப்படுமென்று நீதிபதி தெரிவித்தார்.

## சென்னையில் நியுஸிலந்து கோஷ்டி

சென்னை, பெப். 25

நியுஸிலந்து கிரிக்கெட் கோஷ்டி நேற்று சென்னை வந்து சேர்ந்தது. வருகிற சனிக்கிழமை சென்னையில் இந்தியக் கோஷ்டியுடன் அது முதலாவது டெஸ்டில் விளையாடும்.

## நிலச்சுவாந்தர்மீது கொல்வின் பாய்ச்சல்

பம்பலபிட்டி, வியாழன்

"முதலாளிவர்க்கநிலச்சுவாந்தர்களே கூட்டரசாங்கத்துக்கு எதிராக வேலைசெய்து வருகிறுர்கள், கூட்டரசாங்கம் பதவியிலிருந்தால் ஏழைக் குடியிருப்பாளர்களைச் சுரண்டும் இந்த நிலச்சுவாந்தர்களின் முடிவுக்கு வழிவகுத்துவிடும் என்பதலேயே அவர்கள் இவ்வாறு செய்துவருகிருர்கள்" என தெகிவளை — கல்கிசை முன்னாள் எம். பி. டாக்டர் கொல்வின் ஆர். டி' சில்வா ஹேமாவிலுசன சித்தஹோ முலாவில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

டாக்டர் கொல்வின் மேலும் பேசுகையில் மார்ச்மாத பொதுத்தேர்தலில், கூட்டரசாங்கம் வெற்றிபெற்று பதவிக்கு வந்தால் முதலாளிவர்க்கத்தினரும் ஏகாதிபத்தியவாதிகளும் கடைகட்டவேண்டி நேரிடும் என்ளுர்.

## அண்ணுவுக்கு வாழ்த்து

யாழ்ப்பாணம், வெள்ளி

மண்டைதீவு இளைஞர் முன்னேற்றக் சமூகத் தலைவர் திரு. செ. பரமசோதி மேற்படி இளைஞர் முன்னேற்றக் கழக சார்பில் இந்திய திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் சி. என். அண்ணுதுரைக்கு 'இந்தி எதிர்ப்பு போராட்டம் வெற்றிபெறக வேண்டும்' என்று வாழ்த்தியும், இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் உயிர் நீத்த தியாகிளுக்கு அனுதாபம் தெரிவித்தும செய்தியொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

## கிழமைதோறும் தேசிய கவிப்

கொழும்பு, வியாழன்

அடுத்த மாதத்திலிருந்து தேசிய லொத்தர்சபை வாரந்தோறும் கவிப் நடத்தத் தீர்மானித்துளளது. முதலாவது கவிப அடுத்த மாதம் 11-ந் திகதி இழுக்கப்படும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழுக்கு சம அந்தஸ்து வழங்க வேண்டும்

## சமசமாஜக்கட்சி புரட்சிக்குழுவின் தேர்தல் விஞ்ஞாபனம்

பம்பலப்பிட்டி, வியா.

சிங்கள மொழிக்கு வழங்கப்பட்டுள்ள அதே அந்தஸ்தை தமிழ் மொழிக்கும் வழங்க லங்கா சமசமாஜக்கட்சியின் (புரட்சி குழு) உழைக்குமென மேற்படி கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் உறுதி தெரிவித்துள்ளது.

கட்சியின் 24 அம்சம் அடங்கிய தேர்தல் விஞ்ஞாபனத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பண்டாரநாயகா அரசாங்கங்களும் முதலாளித்துவ ஏகாதிபத்திய சார்புடையவையே. முன்னரிலும் பார்க்க சுதந்திரக் கட்சியின் ஆட்சியின் தொழிலாளர்களும் விவசாயிகளும் மத்திய வகுப்பினரும் பெரிதும் கஷ்டப்படுகிறார்கள்.

9 வருட சுதந்திரக்கட்சி ஆட்சியின்பின் 5 லட்சத்திற்குமதிகமானோர், வேலையற்றிருக்கிறார்கள் என மதிப்புக்கொள்ளப்பட்டுள்ளது. 10 லட்சமானோர் அவர்கள் பெற்றுள்ள தகுதிக்குத் தகுந்த வேலையில்லாத நிலையிலிருக்கிறார்கள். இத்துடன் வாழ்க்கைச் செலவு உயர்ந்துகொண்டே இருக்கிறது.

### பாரபட்சம்

தமிழர் மீதும் மற்ற மொழி பேசும் சிறுபான்மையோர் மீதும் பாரபட்சம் காண்பிக்கப்படுகிறது. இது இப்போது மிகவும் அதிகரித்துள்ளது. தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்குமிடையில் பிளவு அதிகரித்துள்ளது. யு என் பியும் சுதந்திரக் கட்சியும் இவ்வித பாரபட்ச நடவடிக்கையையே மேற்கொண்டுள்ளார்கள்.

### தோட்டத்தொழிலாளர் பிரச்னை

7 லட்சத்துக்குமதிகமான தோட்டத் தொழிலாளர்களும் மற்றும் இந்திய வம்சாவளியினரும் 'நாடற்றவர்' என்ற நிலையில் வைக்கப்பட்டுள்ளார்கள். இவர்களுக்கு வாக்குரிமையோ மற்ற மனித உரிமைகளோ கிடையாது. இலங்கை-இந்திய ஒப்பந்தம் இந்தப் பிரச்னைக்கு எதுவித தீர்வும் காணவில்லை. இதற்குப் பதிலாக இன உறவுகளை இது பெரிதும் பாதித்துள்ளது.

பௌத்த மதத்துக்கு உரிய இடம் அளிக்கப்படுகிறதென்ற போர்வையில் மற்ற சிறுபான்மை மதத்தவர்கள் மீது பாரபட்சம் காட்டப்படுகிறது.

சோல்பரி அரசியல் சாசனம் நீக்கப்பட்டு புதிய, ஜனநாயக முறையில் அமைந்த அரசியல் சாசனம் உருவாக்கப்படுதல்.

பேச்சு சுதந்திரம், பத்திரிகைச் சுதந்திரம், தொழிற்சங்க உரிமைகள் சகல அரசாங்க, கார்ப்பரேஷன் ஊழியர்களுக்கும் அரசியல் உரிமை ஆகியன உறுதிப்படுத்துதல்.

கல்வி, தொழில் அரசாங்க உதவி போன்றவைகளில் எந்த இனத்தினர் மீதும் பாரபட்சம் காண்பிக்கப்படாதிருத்தல்.

இலங்கைப் பிரஜைகளாக விரும்பும் தோட்டத் தொழிலாளர்களுக்கு இலங்கைப் பிரஜா உரிமை வழங்குதல்.

இந்தியா செல்லவிரும்பும் நாடற்றவர்கள் என்ற பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு இந்தியா செல்வதற்குப் போதிய வசதி செய்துகொடுத்தல்.

சகல வங்கிகளையும் தேசியமயமாக்குதல்.

## செங்கலடியில் ஆச்சிரமம்

யாழ்ப்பாணம், வியா.

யோக சுவாமிகளால் ஸ்தாபிக்கப்பட்டு கடந்தபல ஆண்டுகளாக யாழ் நகரில் நடைபெற்றுவரும் 'சிவதொண்டன்' நிலையத்தைப் போன்றதொரு இந்து ஆச்சிரமத்தை மட்டக்களப்பில் செங்கலடியில் சிவதொண்டன் சபையார், பல ஆயிரக்கணக்கான ரூபா செலவில் நிறுவியுள்ளனர். இந்நிலையத்தின் திறப்பு விழா அடுத்த மாதம் 14-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கின்றது. இந்த ஆச்சிரமத்தின் பொறுப்பாளராக சுவாமி இராம்ஸ் போதம் பணியாற்றி வருகின்றார்.

## என். எம். முக்கு டட்லியின் நன்றி

டம்பலப்பிட்டி வியாழன்

அரசாங்கத்துடன் கூட்டுச் சேர்ந்து அரசாங்கத்தின் வீழ்ச்சிக்கும் பிரதமர் ஸ்ரீமதி ஸ்ரீமா பண்டாரநாயக்காவின் வீழ்ச்சிக்கும் வழிகோலிய டாக்டர் என். எம். பெரேராவுக்கு தாம் நன்றி செலுத்துவதாக யு என். பி. தலைவர் திரு. டட்லி சேனாநாயக்கா எட்டியாந்தோட்டையில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

திரு. டட்லி மேலும் பேசுகையில், தாம் என். எம். பெரேராவுக்கு நன்றி தெரிவிக்கும் அதேநேரத்தில் மார்க்ஸிய வாதிகளுடன் கூட்டுச் சேர்த்து சமசமாஜக் கட்சியை சீர்குலைத்ததற்காக திருமதி சிறிமா பண்டாரநாயக வுக்கு தாம் நன்றி செலுத்த விரும்புவதாகக் குறிப்பிட்டார்.

## பாலாதம்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

இலங்கை வர்த்தக ஊழியர் சங்கப் பிரமுகர் திரு. பாலாதம்பு நாளை யாழ்ப்பாணம் வரவிருக்கிறார். காங்கேசன்துறையில் புரட்சிவாத சமசமாஜக் கட்சி அபேட்சகராகப் போட்டியிடும் திரு வி. காராளசிங்கத்தை ஆதரித்து நடைபெறும் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கலந்துகொள்வதோடு தொழிற்சங்கப் பிரமுகர்களையும் சந்திக்கவிருக்கிறார். மொரட்டுவ முன்னாள் எம். பி. திரு மெரில் பெர்னாண்டோ அடுத்த மாதம் 6-ந் திகதி யாழ்ப்பாணம் வருவார்.

## திருவள்ளுவர் தின விழா

வல்வெட்டித்துறை, வியாழன்

இந்து மாணவர் சார்பில் வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியில் திருவள்ளுவர் தினவிழா ஆசிரியர் க. சதிர்காமசதமபி தலைமையில் நடைபெற்றது.

பண்டிவத சத்தியதேவி துரைசிங்கம் பேசுகையில் கூறியதாவது:-

ஊறனிலுள்ள இலக்கியச் சருத்துக்கள் யாவராலும் எல்ம் போற்றப்பட்டுவருகின்றது. இதனால் தமிழ் மொழிக்கும் தமிழர்களுக்கும் பெருமை ஏற்பட்டுள்ளது. திருவள்ளுவரும் பெரும் தமிழ் சான்றோர் மரபையொட்டியே தமது திருக்குறளை இயற்றியுள்ளார். அக்காலத்தில் வெள்ளைக் கடுதாசியில் கறுப்பு மையினால் எழுதிப் புள்ளிகள் பெற்றுச் சித்தியடையும் முயற்சிகள் இருக்கவில்லை. அக்காலத்தில் அறவாழ்க்கைக்கு ஆயத்தம் செய்யும் முயற்சிகளே இருந்தன. அறத்தோடுகூடிய அன்பு வாழ்க்கையை நடாத்திய அக்கால மக்களிடம் பஞ்சம் தலைகாட்டவில்லை. நமக்கெல்லாம் இறைவன் அம்மை அப்பனாக இருக்கும் பொழுது பஞ்சம் தலைகாட்டுகிறது. அறம் பஞ்சமாகியதுதான் காரணம் அறத்திலே மனிதன் செழிப்புற்று வாழ்ந்தால் அவனுக்குப் பஞ்சமேயில்லை." மாணவர் சார்பில் இ. குகதாஸ் நன்றி கூறினார்.

## மகாசிவராத்திரி

தெல்லிப்பழை, வியாழன்

தெல்லிப்பழை கிழக்கு கௌனாவத்தை ஞானவைரவர் சுவாமி கோவிலில் வருகிற திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு மகாசிவராத்திரி விழா ஆரம்பமாகும்.

### அரியாலையில்

அரியாலை ஸ்ரீ சரஸ்வதி அம்பாள் ஆலயத்தில் திங்கட்கிழமை மாலை 6 மணி தொடக்கம் ஆலய முன்றலில் அமைக்கப்பட்ட ஸ்ரீ சரஸ்வதி மண்டபத்தில் ஆரம்பமாகின்றது. விசேட பூசை ஆராதனைகளும், அறிஞர்களின் சொற்பொழிவுகளும், நாடகங்களும் இடம் பெறுகின்றன.

### நுணுவிலில்

நுணுவில் ஸ்ரீவீரபத்திரப்பெருமான் ஆலயத்தில்வருகிறதிங்கட்கிழமை மாலை 7 மணி தொடக்கம் நுணுவில்குளம் கண்ணகை அம்பாள் ஆலயம், மணங்குணன் விநாயகர் ஆலயம், வேதக்கேணி கந்தர் ஆலயம், அகினி வயிரவர் ஆலயம் ஆகிய ஆலயங்களிலிருந்து வரும் கூட்டுப்பிரார்த்தனைச் சபையினரின் கூட்டுறவுடன் கூட்டுப்பிரார்த்தனையும், அகண்டநாம பஜனையும் நடைபெறும். பின்னர் வீரபத்திரர் மகிமை, சிவராத்திரிமகிமை திருவிளையாடற் புராணத்தில் ஓர் பகுதி ஆகிய நிகழ்ச்சிகள் இடம்பெறுவதுடன் நான்கு ... இடம் பெறும்.

# மன்னாரில் நிவாரண வேலைகள் சுறு சுறுப்பு

மன்னார், வியாழன்

மன்னார் பஸ் நிலையத்தின் அருகே கட்டப்பட்டிருந்த கடைகள் சமீபத்தில் ஏற்பட்ட சூறாவளியினால் சேதமுற்றபின் தற்பொழுது திருத்தப்படுகின்றன. அதன்பின் பஸ்நிலையக் கட்டிடமும், பொதுச் சந்தைக் கட்டிடமும் திருத்தப்படும். மன்னார்ப் பகுதியிலுள்ள பள்ளிமுனை வட்டாரத்தில் அநேக வீடுகள் வெள்ளத்தால் அழிவுண்டதாலும், வீடுகளின்றி அநேக மக்கள் கஷ்டப்படுவதாலும், அரசாங்க அதிபரின் முயற்சியால் புதிய வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. பதற்றான வேலைகள் துரிதமாக நடைபெறுகின்றன. பண்டிவிரிச்சான் குடியேற்றப் பகுதியில் 15ப வீடுகளில் 107 வீடுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன. அவர்களுக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. மன்னாரிலுள்ள மற்றைய இடங்களிலும், வைத்தியசாலைக்கு அருகாமையிலும் வீடுகட்டும் வேலைகள் ஆரம்பிக்கப்படும், பாடசாலைகளும் மலசலகூடங்களிலுள்ள ஓடுகள் யாவும் சேதமுற்றதால் அவைகளும் பாவிக்க முடியாத நிலையிலுள்ளன. மன்னாரில் உள்ள அபின் படமாளிகை, முருங்கனிலுள்ள ராசேவரி, உயிலங்குளம் ஸ்ரீ மோகன்முதலிய படமாளிகைகளைத் திருத்த இன்னும் ஒருவருடமாவது பிடிக்கும் என்று தெரிகிறது.

பிரசித்தி பெற்ற யாத்திரைஸ்தலமான மருமடுத் திருப்பதியில் அநேக மரங்கள் வீழ்ந்தமையாலும், யாத்திரிகர்கள் தங்குமிடங்கள், கடைகளுக்குரிய கட்டிடங்கள் முதலியன சேதமுற்றபடியாலும் இம்முறை விழா நடைபெறமாட்டாதென்று ஆலய நிர்வாகிகள் அறிவித்துள்ளனர். நேர்த்திக்கடன் செலுத்த வருபவர்களுக்காக வேண்டிய வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

உயிலங்குளம், கிராமச்சபைக் காரியாலயம், மன்னார் சங்கப் பகுதியின் ஒரு கட்டிடம், மன்னார் மாதாங்கோவில் முதலியன இன்னும் திருத்தம் செய்யவில்லை மன்னார்-சிலாவத்துறை-அரிப்பு வீதிகள் திருத்தப்படாமலே பஸ் போக்குவரத்துச்சேவை நடைபெறுகின்றன.

அடுத்த மாதம் 15-ம் திகதி மட்டில் பாதை உடைப்புகள் திருத்தப்பட்டுவிடுமென்று நம்பப்படுகின்றது. மேலதிகமாக வரவழைக்கப்பட்டுள்ள இராணுவ வீரர்களும் இதற்கான வேலைகளில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் தங்குவதற்காக கச்சேரிக்கு முன்னால் உள்ள கட்டிடம வழங்கப்பட்டுள்ளது' பீதி கொண்டுள்ள மன்னார்ப்பகுதி மக்கள் அமைதியாக இருந்தும் வீட்டுப் பிரச்னை தொழிற் பிரச்னைகளால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## உபதலைவர்

பருத்தித்துறை, வியாழன்

புலோலிக் கிராமசபையின் உபதலைவராக திரு. த. சிதம்பரப்பிள்ளை ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

சபையின் தலைவர் திரு. செ. மாணிக்கவாசகர் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.


REGAL — JAFFNA

NOW SHOWING

Pedro Armendariz
Jacqueline Sassard
in
SONS OF THUNDER
(Technicolor)

ஸ்ரீ மனோகரா (யாழ்ப்பாணம்) போன்: 485

நாகேஸ்வர ராவ் ஸ்ரீ ரஞ்சனி திரைப்பட நடித்த

அரசிளம் பிறந்தவன்

தினசரி 6-30, 9-30, சனி, ஞாயிறு 2-30, 6-30, 9-30.

அருத எண்ணெய்

(அறுபதாம் பச்சையும்
வேறு 44 அரிய மூலிகைகளும் சேர்ந்தது)

கூந்தலை அடர்த்தியாகவும் நீளமாகவும் வளர்க்கும்.
தலைமயிர் உதிர்வதையும், நரைப்பதையும் தடுக்கும்.
பீனிசத்தை முற்றாக குணப்படுத்தும்.
மூளைக்குக் குளிர்ச்சியையும் கண்களுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். கண் எரிச்சல், காது இரைச்சல், காதில் சீழ் வடிதல், அடிக்கடி ஜலதோஷம் பிடித்தல், தும்மல், தலையிடி ஆகிய நோய்களைக் குணப்படுத்தும்.
சிறுவர் முதல் பெரியோர் வரை பாவிக்கலாம்

முழுப்போத்தல் ரூபா 10-00 அரைப்போத்தல் ரூபா 5-00
கால் போத்தல் ரூபா 3-00 2 அவு. போத்தல் ரூபா 1-00

எல்லா வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

தயாரிப்பாளர்:
வைத்தியர் பி. எம். திசாநாயக்க,
கம்பளை.

யாழ்ப்பாணத்திற்கு ஏகவினியோகஸ்தர்கள்
எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி
53, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(தொலைபேசி: 541)

இன்றோறுடு திரையிடப்படுகிறது!

| | | |
|---|---|---|
| கிங்ஸ்லி (கொழும்பு) | பிளாசா (வெள்ளவத்தை) | நவா (கொம்பனித்தெரு) |
| ராஜ் (கீர்கொழும்பு) | விஜயா (மட்டக்களப்பு) | விஜிதா (ஹட்டன்) |
| கல்யாணி (காவலபிட்டி) | மொடேர்ன் (பதுளை) | வெலிங்டன் (யாழ்ப்பாணம்) |



யாழ்ப்பாணம் வெலிங்டனில்

தினசரி பி. ப 2-30, 6-30, 10-00. சனி, ஞாயிறு காலை 10-30, பி ப 2-30 6-30, 10-00

ஜெமினி கணேசன் - சாவித்திரி (நடித்த)

கற்பகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## S. R. S.
### ஜவுளி மாளிகையில்

6 யார், 7 யார் கைத்தறிச் சேலைகள், 100-ம் நம்பர் 120-ம் நம்பர் நூல்களால் எங்கள் சொந்த தறிகளில் தயார் செய்யப்பட்ட நித்தபாவனைக்குகந்த சேலைகள் விற்பனைக்குத் தயாராகவிருக்கிறது.

6 யார், 7 யார் லங்காசேலைகளும்; லங்கா வேட்டி சால்வைகளும் மலிவான விலைகளில் கிடைக்கும்.

சங்கக் கடைகளுக்கும், வியாபாரிகளுக்கும் விசேஷ கழிவு உண்டு.

எஸ். ஆர். செல்லத்துரை
216, காங்கேசன் துறை வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 296


## அடைவுநகை ஏலவிற்பனவு

யாழ்ப்பாணம் காங்கேசன் துறை வீதி, 222-ம் இலக்க கடையில் கந்தையா பரமு அவர்களிடம் 1-6-61 தொடக்கம் 24-5-63 வரைக்கும் வைத்த அடைவுகளில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படாதவைகளையும் மீட்கப்படாதவைகளையும் 12-3-65 வெள்ளிக்கிழமை முற்பகல் பத்துமணி தொடக்கம் மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வீ. செ குட்டிப்பிள்ளை,
ஏலவிற்பனவாளர்
17-2-65

643, காங்கேசன் துறைவீதி,
யாழ்ப்பாணம். 1621

## வரி விளம்பரம்

### டைப்ரைட்டர்

'டைப்ரைட்டர்' பழுதுபார்த்துக்கொடுக்கப்படும். குறைந்த செலவு, சிறந்த வேலை. ஜெயசேகர, 330, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். 1721

### விற்பனை

இடித்து வறுக்கப்பட்ட ஊர் அரிசிமா ஒரு இறுத்தல் பொலிதீன் பக்கெட்டுகளில் தொகையிலும் சில்லறையிலும் விற்பனைக்குண்டு சித்திரா ஸ்தாபனம், 28, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் 1730

### தேவை

அப்பளம் தயாரிக்கும் தொழிற்சாலைக்கு அனுபவம் வாய்ந்தவர்களும், பழகவிரும்புவர்களும் தேவை. நற்சாட்சிப்பத்திரங்களுடன் நேரில் விண்ணப்பிக்கவும். A S. சபாரத்தினம், 188, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1732

## இராமகிருஷ்ண ஆசிரமம்

கொழும்பு, வியாழன்

வெள்ளவத்தை இராமகிருஷ்ண ஆசிரமத்தில் வருகிற திங்கட்கிழமை மகா சிவராத்திரியன்று விசேஷ பூஜைகளும், பிரார்த்தனைகளும் நடைபெறும். வருகிற 5-3-65 அன்று பகவான் இராமகிருஷ்ண பரமஹம்சரின் 130-வது தினம் கொண்டாடப்படும்.

## கடை தீக்கிரை

துனுக்காய், வியாழன்

சென்ற சனிக்கிழமை இரவு மல்லாவி ஸ்ரீ பாலசுப்பிரமணியர் கோவில் வீதியில் உள்ள அ. ஆறுமுகம் என்பவரின் தேநீர்க்கடைக்கு யாரோ இனம் தெரியாதவர்கள் தீ மூட்டியதால், கடையும் கடைக்குள் இருந்த தளபாடங்களும் பணம், உடுப்பு முதலியபொருள்களும் தீக்கிரையாகிவிட்டன.

# "கூட்டு அரசாங்கம்தான் மொழிப் பிரச்னையைத் தீர்க்கும்"

## நீர்வேலி கூட்டத்தில் லெஸ்லி குணவர்த்தன

யாழ்ப்பாணம், வெள்ளி

"சிங்கள-தமிழ் மக்களிடையே காணப்படும் வேற்றுமைகளை அகற்ற நாம் பாடுபட்டு வருகின்றோம்" என்று போக்குவரத்து மந்திரி திரு. அனில்முனசிங்கா நேற்றிரவு நீர்வேலியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசும்போது சொன்னார்.

கோப்பாய்த் தொகுதியில் ஐக்கிய இடதுசாரி அபேட்சகராகப் போட்டியிடும் திரு. எம். துரைராசாவை ஆதரித்து நீர்வேலி வடக்கு ஸ்ரீ காமாட்சி அம்பாள் விளையாட்டு மைதானத்தில் திரு சி. மாணிக்கவாசகர் தலைமையில் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது.

திரு. அனில் முனசிங்கா தொடர்ந்து பேசுகையில், ஆறு மாதங்களில் யாழ்நகரின் பஸ் சேவை ஈழத்தில் தலைசிறந்த ஒன்றாக இருக்குமெனக் குறிப்பிட்டார். கூட்டரசாங்கம் பதவிக்கு வந்தபின் தமிழ்ப்பகுதிகளில் போக்குவரத்துச்சேவை சீரடைந்துள்ளது எனக் குறிப்பிட்ட திரு. அனில் முனசிங்கா மேலும் சொன்னதாவது:-

"உலகம்சோஷலிஸப்பாதையிலே முன்னேறிச் செல்கிறது. முதலாளித்துவம் இந்த நாட்டிலிருந்து விரட்டப்படாவிடில் வேலையில்லாத் திண்டாட்டத்தைச் சமாளிக்க முடியாது.

வடபகுதியில் பட்டதாரிகள் வேலைதேடுபவர்களாக இருக்கிறார்கள். இந்தப் பிரச்னையைத் தீர்க்க சமஷ்டிக்கட்சியினால் முடியாது மந்திரக்கோலினால் இப்பிரச்னையைச் சமாளிப்பேன் என்று நான் கூறவில்லை. தொழில் வளர்ச்சியைப் பெருக்குவதன் மூலமே வேலையில்லாப் பிரச்னையைச் சமாளிக்க முடியும்.

தமிழ்ப் பகுதிகளில் வேலைவாய்ப்பு இல்லாதவர்கள் விவசாயத்தில் ஈடுபட வேண்டும். புதுப்புது தொழிற்சாலைகளை அமைப்பதுதே கூட்டரசாங்கத்திற்கு தேவை. முதலாளிகளிடம் பதுக்கி வைக்கப்பட்டு உள்ள பணத்தை நாம் இதற்காகப் பயன்படுத்துவோம்.

மக்கள் நாட்டில் நடைபெறும் விஷயங்களை ஆழமாகச் சிந்திப்பதில்லை, மக்களை எதிர்நோக்கியுள்ள பிரச்னைகள் என்ன என்பதனை அவர்கள் தேர்தல் சமயத்திலாவது சிந்திக்க வேண்டும். இந்துவானாலும் பௌத்தரானாலும் நாட்டிலுள்ள சகல மக்களும் முன்னேற வேண்டும்."

கோப்பாய்த் தொகுதி இடதுசாரி அபேட்சகர் திரு. மா. துரைராசா பேசும்போது கூட்டரசாங்கம் பதவிக்கு வந்ததும் பிரதேச சபைகள், அமைக்கப்படுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமென்றும் கூட்டரசாங்கம் தமிழ்ப் பிரமுகர் ஒருவருடன் பேச்சுக்கள நடத்தி வந்த போது கூட்டரசாங்கத்தை சமஷ்டிக்கட்சியினர் வீழ்த்தியது அடுத்த பொதுத் தேர்தலைக் கருத்திற் கொண்டே எனவும் கூறினார். அவர் மேலும் பேசுகையில், பண்டாரநாயக்கா செல்வநாயகம் ஒப்பந்தத்தைகிழித்தெறிய வற்புறுத்திய ஐக்கிய தேசியக் கட்சியினரை தமிழர்கள் நம்புவதில் பயனில்லை என்றும் குறிப்பிட்டார்.

திரு. லெஸ்லி குணவர்த்தன பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

சமஷ்டிக் கட்சியினர் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் கூறி வருவதுபோல சமநிலை ஏற்படுத்தும் கட்டம் ஒருபோதும் ஏற்படப்போவதில்லை. கூட்டரசாங்கம் பெரும்பான்மை பலத்துடன் ஆட்சி பீடத்திற்கு வருவது உறுதி. தமிழ்பேசும் மக்களின் மொழிப்பிரச்னையையோ, வேறு பிரச்னைகளையோ தமிழ்க்கட்சிகளினால் பெற்றுக்கொடுக்க முடியது. தமிழ்பேசும் மக்கள் சமஷ்டிக் கட்சியின் வெறும்கோஷங்களுக்கு செவிமடுக்காமல், தமிழ் மக்களின் நண்பர்களான இடதுசாரிகளைத் தமது பிரதிநிதிகளைத் தெரிவுசெய்ய வேண்டும். கூட்டரசாங்கத்தினால் தான் தமிழ்பேசும் மக்களின் மொழிப்பிரச்னைக்குத் தீர்வுகாண முடியும்.

திருவாளர்கள் வி. ஆனந்தசங்கரி, கே. வைகுந்தவாசன், சி. நாகராசா உட்பட மற்றும் பலரும் பேசினர்.




உண்மையான ஜேர்மனிய சுவை அனுபவிக்க

திறீ கோயிண்ஸ்

இந்த லாகர் அதி உன்னத பானம் தனக்கென ஒரு சுவையும் பொன்னிறமும் வெண்ணுரையும் கொண்டது
திறீ கோயிண்ஸ லாகர் ஜேர்மன் வல்லுனர்களால் சிறந்த பண்டங்களில் இருந்து ஆசியாவிலேயே அதி நவீன ஆலையில் தயாரிக்கப்பட்டது
திறீ கோயிண்ஸ் லாகரை வாங்கினால் நீர் ஓர் உன்னத பானத்தை பெற்றவராவீர்.

மெக்கலம் புறூவெறீஸ் (சிலோன்) லிமிடெட்
விநியோகஸ்தர்கள்:
ஷாவலாஸ் அன் கெட்ஜஸ் லிமிற்டட்,
கொழும்பு-3.

IWT MB6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் கொலை வழக்கில் எதிரிக்கு 15 வருட கடூழியம்!

யாழ்ப்பாணம், வெள்ளி

மன்னார் கொலை வழக்கு நேற்று வடபகுதி அஸைஸ் நீதிமன்றத்தில், நீதியரசர் பி. ஸ்ரீஸ்கந்தராசா முன்னிலையில் இரண்டாவது தினமாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபின், ஜூரியின் முடிவை ஏற்றுக்கொண்டு நீதியரசர் எதிரிக்கு 15 வருட கடூழிய சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

ஜூரியினர் 30 நிமிடங்களுக்கு மேலாக தனிமையில் மந்திராலோசனை நடத்திய பின் தங்கள் முடிவைத் தெரிவித்தனர். ஜூரி சபையினரில் ஆறுக்கு ஒன்று விகிதம் கொலைக்குற்றமாகாத கைமோசக் கொலை செய்த குற்றத்தால் எதிரி குற்றவாளி எனத்தெரிவித்தனர்.

இவ்வழக்கில் 1964-ம் ஆண்டு ஜனவரி 15-ந் திகதி மன்னார் பகுதியைச் சேர்ந்த வண்ணான் குளத்தில், முருகன் கறுப்பையா என்பவர் ஆண்டி கறுப்பையா என்பவரை கொலைசெய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. எதிரியின் சார்பில் அரசாங்கத்தால் வழக்கறிஞர் திரு. பாலகுமார் நியமிக்கப்பட்டிருந்தார். தீர்ப்பையறிவதற்காக நீதிமன்றத்திற்கு உள்ளே பெருந்திரளான மக்கள் திரண்டிருந்தனர்.

தீர்ப்பளிக்கும்போது நீதியரசர் ஜூரிசபையினரின் தீர்ப்பை தான ஏற்றுக்கொள்ளவில்லை என்றும், சட்டப்படி அத்தீர்ப்பை ஏற்று அதற்குத் தண்டனை அளிக்கவேண்டுமென்றும இது அப்பட்டமாக ஒருகொலைக் குற்றம் என்றும் அனுதாபம் காட்ட இடமில்லையென்றுங் கூறினார்.

எதிரியின் வழக்கறிஞர் எதிரி இதற்குமுன் வேறு குற்றச்சாட்டில் ஈடுபடவில்லை என்றும், அவர் வயதில் குறைந்தவராக இருக்கிறாரென்றும் தெரிவித்தார். நீதியரசர் இதன்பின் எதிரிக்கு 15 வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

# இந்திய கலைஞர்களை அழைப்பது பற்றி அபிப்பிராய பேதம்

## இசையாளர் கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

இலங்கையில் வாழும் இசையாளர் சமூகத்தை எதிர்நோக்கியுள்ள பல பிரச்னைகள் பற்றி ஆலோசிப்பதற்காக யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஆலோசனைக்கூட்டம் இந்தியக் கலைஞர்களை வருவிப்பது சம்பந்தமாக எழுந்த பிரச்னையால் காலவரையறையின்றிப் பின்போடப்பட்டது.

யாழ்ப்பாணம் "கில்னர் லேன்" முத்துமாரியம்மன் கோவிலடியில் அமைக்கப்பட்ட முத்தையா சோமு அரங்கில் ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது. இசையாளர் சமூகத்தை எதிர்நோக்கியுள்ள கலை, பொருளாதாரப் பிரச்னைகள் பற்றி ஆராய்வதற்காக இந்த மகாநாடு கூட்டப்பட்டது. இந்தியக் கலைஞர்களை இவ்வாண்டும் வரவழைப்பதற்கான 'பர்மிட்'டுக்களைப் பெற முயற்சிக்கவேண்டுமென கூட்டத்தில் கோரிக்கை விடப்பட்டபோது அதனைப் பலர் பலமாக ஆட்சேபித்தனர். கலைஞர்களை தற்போதைய இசையாளர்களின் பொருளாதார நிலையை உத்தேசித்து தற்காலிகமாகவேனும் வரவழைக்கக்கூடாதென ஒரு சாரார் கருத்துத் தெரிவித்தனர். பலர் இதை எதிர்த்ததைத் தொடர்ந்து சபையில் காரசாரமான விவாதமேற்படவே ஆலோசனைக் கூட்டம் பின்போடப்பட்டுள்ளது.

இசையாளர் சமூக நலனில் அக்கறை காட்டுபவர்களிடம் ஆலோசனை பெற்று மீண்டும் இந்த ஆலோசனைக்கூட்டத்தைக் கூட்டுவதென முடிவு செய்யப்பட்டது.

கலைஞர்களை இந்தியாவில் இருந்து வருவிக்க அரசாங்கம் வழங்கி வந்த 'கோட்டா' முறை இவ்வருடம் முடிவடைகிறதென்பது குறிப்பிடத்தக்கது.

# சி. பி. டி. சில்வாவின் கண்டனம்

பம்பலப்பிட்டி, வியாழன்

'கூட்டரசாங்கம் ஏற்படுமுன்னர் மார்க்ஸிய வாதிமன் காலம் சென்ற திரு. எஸ். டபிள்யு. ஆர். பண்டாரநாயகாவின் கொள்கைகளைக்குறை கூறிவந்தார்கள், அவரது கொள்கைகள் செயல்படுத்த முடியாதவை என்றும் சொல்லிவந்தார்கள்'

இவ்வாறு சுதந்திரக்கட்சியிலிருந்து விலகியவரும் தற்போது ஸ்ரீலங்கா சுதந்திர சோஷலிஸக் கட்சியின் தலைவருமான திரு. சி. பி. டி. சில்வா, வெளிகமவில் யு. என். பி. சார்பில் போட்டியிடும் திரு. மொண்டேகு ஜெயவிக்ரமாவை ஆதரித்து தெஹிவளை பிட்டியாவில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு சில்வா மேலும் பேசுகையில், கூட்டரசாங்கத்தில் மக்களுக்கு சலிப்பு ஏற்பட்டுவிட்டது என்றும் மார்க்ஸிய வாதிகளுடன் அமைக்கப்பட்ட கூட்டரசாங்கம் கொண்டுவந்த மசோதாக்களின் அபா-

# யாழ்ப்பா...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

-கும் முயற்சிக்கும் நன்றி தெரிவித்தார் அமைச்சர் மிகவிரைவில் மேலும் பலபுதிய பஸ்களை அனுப்பிவைக்க இணக்கம் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாநகரசபை புதிய பஸ் நிலையத்திற்கான காணியைத் தந்தவுடன் நவீன வசதிகளுடன் பஸ் நிலையத்தை அமைத்துத் தருவதாகவும் மந்திரி உறுதியளித்தார்.

பருத்தித்துறை பஸ் டிப்போவுக்கும் நீர்வேலி பாலர் பகல் விடுதிக்கும் அமைச்சர் விஜயம் செய்திருந்தார். நீர்வேலி பாலர் பகல் விடுதியில் அவருக்கு வரவேற்பளிக்கப்பட்டது.

யம்பற்றி தாம் அறிந்திருந்ததாகவும் பிரதமரும் அவரது ஆதரவாளர்களும் இதுபற்றி தெரியாதவர்களாகவிருந்தார்களென்றும் கூறினார்.

அடுத்த பிரதமராக திரு. டட்லியையே மக்கள் தேர்ந்தெடுப்பார்களென தாம் திடநம்பிக்கை கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# பிரதமர் அறிக்கை

கொழும்பு, வியாழன்

இந்தியாவை தாக்குவதற்கு திருக்கோணமலை துறைமுகத்தை சீனர்கள் பயன்படுத்துவது சம்பந்தமாக அவர்களுடன் நான் ஒப்பந்தம் செய்துவிட்டதாக திரு. சி. பி. டி. சில்வா கூறியது பொய்யான பொறுப்பற்ற பேச்சாகும்" என்று ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா வெளியிட்ட அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

திரு. சி. பி. டி' சில்வாவின் கூற்றை மறுத்து இன்று பிரதமர் காரசாரமான அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். திரு சில்வா கூறியதை அவர் ஆதாரபூர்வமாக நிரூபிக்க வேண்டும் என்றும், தாம் பிரதமர் என்ற முறையில் மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுப்பது என்பது பற்றியும் இது ஒரு பாரதூரமான குற்றச்சாட்டாகவிருப்பதால் தனிப்பட்டமுறையில் மேற்கொண்டு எடுக்கவேண்டிய நடவடிக்கை பற்றியும் தாம் ஆலோசித்துவருவதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

"திரு சி. பி டி' சில்வா மந்திரியாக இருந்தபொழுது இப் பிரச்னையைக் கிளப்பியிருக்கலாம். பல தஸ்தாவேஜுக்களையும் பார்க்கக்கூடிய சந்தர்ப்பம் அப்பொழுது அவருக்கு இருந்திருக்கிறது மேலும் நான் வெளிநாடு சென்றிருந்த சமயங்களில் கூட இதைக் கிளப்பியிருக்கலாம் ஆனால் இப்பொழுது இதைக் கூறும்பொழுது அந்த சந்தர்ப்பத்தை எங்கே, எப்போது நான் செய்தேன் என்பதையும் கூறவேண்டும்" என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கூடாக இந்தியாவுக்கு ஆபத்து ஏற்படும் என்ற புரளியைக் கிளப்பி ஒன்றும் அறியாத இலங்கையிலுள்ள இந்திய வாக்காளர்களை ஏமாற்றுவதற்காக செய்யப்பட்ட தந்திரம் இது என்பதை பொதுமக்கள் அறிவர், இதை திரு சி. பி. டி சில்வா நிரூபிக்கவேண்டும்" என்றும் பிரதமர் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# 'ஈழநாடு' சூறாவளி கஷ்டநிவாரண நிதி

## கூட்டுறவு வங்கி ரூ. 500 அன்பளிப்பு

'ஈழநாடு' சூறாவளி கஷ்ட நிவாரண நிதிக்கென யாழ்ப்பாணம் கூட்டுறவு மாகாண வங்கி 500 ரூபா காசோலை யொன்றை அனுப்பியுள்ளது.

திரு. ச. சந்திரசேரி, இலங்கை அரசாங்க புகையிரதப் பகுதி, பரந்தன்—52-00

மொத்தம் பொருளாகவும் பணமாகவும் 'ஈழநாடு' சூறாவளி கஷ்டநிவாரண நிதிக்கு இதுவரை 26470 ரூபா 21 சதம் வசூலாகியுள்ளது.

# ஹிந்தி பேசும் மக்கள் தமிழ் கற்க உதவி

சென்னை, பெப், 25

ஹிந்தி பேசும் ராஜ்யத்தினர் ஹிந்தியின் மூலம் தமிழ் கற்பதற்கான முதல் இரண்டு பாடபுத்தகங்களைத் தயாரிப்பதற்காக தட்சிண பாரத ஹிந்தி பிரசாரசபைக்கு தமிழ்நாடு அரசாங்கம் ரூபா 8000 அனுமதித்திருக்கிறது.

இந்தப் புத்தகங்களில் தமிழ் எழுத்துக்களும் வாக்கியங்களும், அவற்றுக்குரிய ஹிந்தி எழுத்துக்களும் வாக்கியங்களும் இருக்கும்.

முதல் பாடப்புத்தகம் ...டாவது வகுப்புப் பாடப்புத்தகம் விரைவில் தயாராகிடுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# கதிர்காமத்தில் நவீன பஸ் நிலையம்

யாழ்ப்பாணம், வெள்ளி

கதிர்காமத்தில் நவீன வசதிகளுடன் அமைந்த புதிய பஸ் நிலையமொன்று அமைக்கப்படவிருக்கின்றது. இதற்கான அடிக்கல் நாட்டுவிழா இவ்வார இறுதியில் போக்குவரத்து அமைச்சர் திரு. அனில் முனசிங்கா தலைமையில் நடைபெறும்.

கதிர்காமத்திற்குப் பெருந்திரளாக மக்கள் செல்லும் நாட்களில் போக்குவரத்தைச் சமாளிக்கவும், யாத்திரிகர்களுக்கு வசதியளிக்கவும்கூடிய வகையில் இப் புதிய பஸ் நிலையம் அமைக்கப்படும்.

நவீன வசதிகளுடன் அமைக்கப்படும் இப் புதிய பஸ் நிலையத்தில் யாத்திரிகர்கள் தங்குவதற்கான விடுதி ஒன்றும் அமைக்கப்படவிருக்கின்றன.

புதிய பஸ் நிலையம் ஐந்து மாதத்திற்குள் பெரும்பாலும் பூர்த்தி செய்யப்படலாமெனத் தெரிகிறது.

# ஹிந்தி ஆட்சி..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## சட்டம் திருத்தப்படும்

"இந்திய யூனியனின் உத்தியோக மொழி ஹிந்தி. துணைமொழி ஆங்கிலம். இதில் மாறுதல் செய்யும் பேச்சே கிடையாது. ஹிந்தி பேசாத மக்களுக்கு காலஞ்சென்ற பிரதமர் நேருஜி அளித்த வாக்குறுதிகளை சட்டமாக்கும்வகையில் 1963-ம் ஆண்டு இயற்றப்பட்ட இந்திய ஆட்சி மொழிச் சட்டம் திருத்தப்படும் சகல ராஜ்யங்களிலும் மும்மொழித் திட்டம் நிறைவேற்றப்படவேண்டும்" என்றும், பிரதமர் சாஸ்திரி தெரிவித்தார்.

## தமிழ்நாட்டுக்கு உறுதிமொழி

தமிழ்நாட்டு மக்கள் மீது ஹிந்தி எந்தவிதத்திலும் திணிக்கப்படமாட்டாது அவர்கள் மீது ஹிந்திமொழி சுமத்தப்படாமலும், அதனால் அவர்கள் பாதிக்கப்படாமல் இருக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் சாஸ்திரி தெரிவித்தார்,

## தமிழுக்கு அந்தஸ்து

ஹிந்திபேசும் ராஜ்யங்களில் தென்னாட்டின் ஒரு மொழி குறிப்பாக, தமிழ் கற்பிக்கப்படுவதும் தென்னாட்டில் ஹிந்தி மொழி போதிக்கப்படுவதும் நாட்டின் ஐக்கியத்தை நிலைநாட்ட சிறந்ததொரு திட்டமாகவிருக்கும் ஐக்கிய இந்தியாவை உருவாக்குவதில் முன்னிற்கும் மக்கள் இத்திட்டத்தை ஏற்றுக்கொள்ள முன்வரவேண்டும்" என்றும் பிரதமர் சாஸ்திரி கேட்டுக்கொண்டார் முதன்மந்திரிகள் செய்துகொண்ட சில முடிவுகள் வருமாறு:

## முதன்மந்திரிகள் முடிவுகள்

○ ஹிந்தியும் ஆங்கிலமும் ஆட்சிமொழிகளாக இருக்கவேண்டும் ○ மும்மொழித் திட்டம் சகல ராஜ்யங்களிலும் தீவிரமாக அமுலசெய்யப்படவேண்டும். ○ ஆங்கிலம், ஹிந்தி மொழிகளுடன் நாட்டின் பல்வேறு பிராந்திய மொழிகளுக்கும் முக்கிய வாய்ப்புகள் அளிக்கப்பட்டு அவை ஊக்குவிக்கப்படவேண்டும். ○ அகில இந்திய தேர்வுப் பரீட்சைகள் ஹிந்தி, ஆங்கிலம் மற்றும் பிராந்திய மொழிகளிலும் நடைபெறக்கூடியதான சமனத் திட்டமொன்று கொண்டுவரப்படவேண்டும் ○ அகில இந்திய சர்விஸ் போட்டிப் பரீட்சைகள் பிராந்திய மொழிகளில் நடைபெற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். ○ ஹிந்தி பேசாத மக்களின் நலன் குறித்து நேருஜி அளித்திருந்த உறுதிமொழிகளுக்கு சட்டவடிவம் கொடுத்து அவற்றைச் செயல்படுத்தவேண்டும்.

# இன்று

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரஸ்வாமி கோவிலில் நடைபெறும் 'சம்பூரண இராமாயண'ப் பிரசங்கத் தொடரில் 'சீதாகல்யாணம்" என்னும் பொருள்பற்றி ஸ்ரீ சி. எஸ், ஸ். மணிபாகவதர் கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார்.

# வாலிப முன்னணி கிளை

யாழ்ப்பாணம், வெள்ளி

அண்மையில் இரணைதீவில் தமிழரசுக் கட்சி வாலிப முன்னணியின் கிளையொன்று அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

இதன் தலைவராக செ. ஜேம்ஸும்' காரியதரிசியாக வி செபமாலையும் தனாதிகாரியாக சி. சந்தியாவும் தெரிவு செய்யப்பட்டனர். போஷகர்: திரு ச; தோமஸ். ஆறு பேர் கொண்ட நிர்வாகசபையொன்றும் அமைக்கப்பட்டது.

படகு சேவை இப்பகுதியில் மோசமாகவிருப்பதால் வாரந்தோறும் ஒருசேவை இருக்கவேண்டுமென்றும், தபால் விநியோகம் தினமும் நடைபெறவேண்டுமென்றும சம்பந்தப்பட்ட அமைச்சர்களைக் கேட்பதென்று கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

கூட்டத்தில் திரு. கா. பொ. இரத்தினம் உட்படபலர் உரை நிகழ்த்தினர்.

# நெருக்கடியை....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்று கூறினர்,

## உறுதி மொழி

ஒரு அங்கத்தவரின் கேள்விக்கு திரு சாஸ்திரி பதிலளிக்கையில்; உறுதி மொழி கற்பிக்க சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்றும் எந்த ஒரு இந்திய மொழியின், வளர்ச்சிக்கும் தடை விதிப்பது அரசாங்கத்தின் கொள்கையல்ல என்றும் கூறினர்.

# "போராட்டத்தில் ஒத்துழைத்தேன்"

## —முன்னாள் எம். பி.

யாழ்ப்பாணம், வெள்ளி

"தமிழ் பேசும் மக்களுக்கு என்னாலான தொண்டுகளைச் செய்திருக்கின்றேன். தமிழர்களின் உரிமைப் போராட்டத்திற்குமாறாக நடந்து கொள்ளாமல்வேண்டிய ஒத்துழைப்பு அளித்துள்ளேன்" என்று யாழ்ப்பாணம் முன்னாள் எம். பி திரு அல்பிரட் துரையப்பா நரிக்குண்டடியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் பேசும் போது சொன்னார்.

திரு. துரையப்பாவை ஆதரிக்குமுகமாக நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில் பதவிக்காகத் தாம் மக்களுக்குச் சேவை செய்யவில்லை என்றும் பதவியை விரும்பியிருந்தால், மந்திரியாகவோ, உதவி மந்திரியாகவோ நியமனம் பெற்றிருக்க முடியும் எனவும் குறிப்பிட்டார்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 65-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 26-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org